செ.வெ.எண்: 73 நாள்: 23.09.2019

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் 05 பயனாளிகளுக்கு ரூ.6.55 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.09.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், முதியோர் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, பட்டா பெயர் மாற்றம், கல்விக்கடன், தொழிற்கடன் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேண்டிய கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை, பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேலும், மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடங்களுக்கு சென்று கோரிக்கை மனுக்கனை பெற்றுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தமிழ்நாடு மாநில நோயாளர் நலநிதியில் இருந்து கீழத்திருச்செந்தூர் கிராமத்தை சேர்ந்த திரு.சுப்பையா என்பவரின் குடும்பத்தாரிடம் ரூ.25,000/-க்கான காசோலையினையும், கோவில்பட்டி TDTA தொடக்கப்பள்ளி சத்துணவு அமைப்பாளராக பணியாற்றி பணியிடை காலமான திருமதி.ஜெகதாம்பாள் என்பவரது மகள் திருமதி.ரஹ்மத்பீவி என்பவருக்கு கருணை அடிப்படையில் சமத்துவபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் சத்துணவு அமைப்பாளருக்கான பணி நியமன ஆணையினையும், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ், 03 பயனாளிகளுக்கு தலா ரூ.2.10 லட்சம் மதிப்பில் வீடு கட்டுவதற்கான உத்தரவினை வழங்கினார். இன்று மொத்தம் 05 பயனாளிகளுக்கு ரூ.6.55 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரநாராயணன், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திரு.வீரராகவன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சிவசங்கரன், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்ட மாவட்ட செயலாக்க அலுவலர் திரு.உலகநாதன், நிறுவன வளர்ச்சி மேலாளர் திரு.பருண பாஸ்கரன், இந்தியன் வங்கி முதுநிலை மேலாளர் திருமதி.சோமசுந்தரி, வங்கி மேலாளர்கள் திரு.கார்த்திகேயன், திரு.அகமது அல்தாப் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**